**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | | | |
|---|---|---|---|
| **SESSIONS** | **31** | **of** | **2019** |

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | Prosecution | PW | 2 |

| | |
|---|---|
| பெயர் | தாமோதரன் |
| Desgination | தலைமை காவல் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the th day of August 2026

நாள்: 10.08..2026 – அ.சா. (எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)

## முதல் விசாரணை

நான் தற்சமயம் திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் உட்கோட்டம், அணக்காவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். பாலுசெட்டி சத்திரம் காவல் நிலைய குற்ற எண் 453/2017 இதச பிரிவு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி சங்கரிடம் உதவி ஆய்வாளர் சங்கர் என்பவர் விசாரணை செய்தததில் யாதொரு துன்புறுத்தல் இல்லாமல் தாமாக துமுன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என் முன்னிலையிலும் அசா 1 சுரேஷ் முன்னிலையிலும் பதியப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த இடத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் ஆசா 1சுரேஷும் உதவி ஆய்வாளர் சங்கர் அவர்களும் சென்றோம். இரண்டு இருசக்கர வாகனத்தில் சம்பவம் இடத்துக்கு சென்றோம். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் கேட்டதால் தற்சமயம் சொல்கிறேன் எதிரியை 10 மணிக்கு அன்றைய தினம் கைது செய்தோம் 11 மணிக்கு பொருட்கள் கைப்பற்றப்பட்டது டிராக்டர் மற்றும் ட்ரெய்லர்

கைப்பற்றப்பட்டது என்னிடம் காட்டப்படும் ஆஷா ரெண்டு மற்றும் ஆஷா மூன்று வண்ண புகைப்படத்தில் உள்ள வாகனங்கள்தான். என்னிடம் வாக்குமூலம் மட்டுமே பெறப்பட்டது புகார் எதுவும் தனியாக கொடுக்கவில்லை சம்பவ இடத்திலேயே வாக்குமூலம் பெறப்பட்டது பிறகு கைது செய்யப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நேரடியாக காவல் நிலையத்திற்கு அன்றைய தினம் 12 மணிக்கு சென்றோம். 12 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்ட நிலையில் எப்படி 11 மணிக்கு தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரில் குற்ற எண் பதியப்பட்டது என்றால் அடுத்த குற்ற எண் என்ன என்று எங்களுக்கு தெரியும் அதனால் பதியப்பட்டது சட்டப்பிரிவும் சேர்த்துள்ளோம் என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் உதவி ஆய்வாளர் சங்கர் எங்களுடன் வந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் தெரியவில்லை. மேற்படி பார்வை மகஜர் சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டதை உதவி ஆய்வாளர் என்பதால் கையொப்பம் செய்துவிட்டு அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கைது குறிப்பானை தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஆமாம். கைது 10 மணிக்கு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலேயும் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் சொல்லப்பட்டுள்ளது என்றால்

ஆமாம். ஆஜர் எதிரி எடுத்து வந்ததாகச் சொல்லும் மண் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா அது எந்த வகை மண் என்று அறிக்கை பெறப்பட்டதா என்றாள் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் எங்கு எப்படி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் உதவி ஆய்வாளர் மடிக்கணினி கொண்டு வந்திருந்தார் அதில் மூலமாக தட்டச்சு செய்யப்பட்டது. பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி நினைவில்லை. நான் உயர் அதிகாரிகளுக்கு பவ்யப்பட்டு எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் நிலையத்திலேயே தயாரித்தோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவும் இல்லை பொருட்கள் கைப்பற்றப்படவும் இல்லை அனைத்து ஆவணங்களும் பிண்ணிட்டு தயாரிக்கப்பட்டு காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு ஆய்வாளருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**மறு விசாரணை**

**இல்லை**

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.